# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/26 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

*1901/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

LA/2327

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் பதுளை- ஹாலிஎலை- எல்லை கூட்டு நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் மதுரகம நிலத்தடி நீர்த் தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமை கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,  
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்  
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,  
“லக்திய மெதுர”,  
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,  
பெலவத்தை,  
பத்தரமுல்லை,  
2015, பெப்புருவரி 03.  
5/2/1/1077

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 68/சீ, மதுரகம கிராம அலுவலர் பிரிவின் மதுரகம கிராமத்தில் அமைந்துள்ள தெமேதரவத்த நெதர்வலி கிராமத்தில் சுமார் 01றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு ; |
| கிழக்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு ; |
| தெற்கு | : | வீதி (பிரதேச சபை) ; |
| மேற்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: பிரதான நிறைவேற்று அதிகாரி,  
ஹப்புகஸ்தன்னை பெருந்தோட்ட கம்பனி (PLC),  
இல. 95ஏ, நம்பபானை,  
இங்கிரியா.

LA/*1747*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபைக்கு யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் உடல்நல கருத்திட்டத்தின் கீழ் வேலணை நீர் கோபுரம் நிர்மாணித்தல் பொருட்டு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமை கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, பெப்புருவரி 03.*
*5/2/1/1090*

***அட்டவணை***

*யாழ் மாவட்டத்தில், தெற்குத் தீவுகள் (வேலணை) பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் J/13, கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள நொச்சிக்காடு பிரிவுகள் எனும் காணியின் மொத்த அளவில் இருந்து சுமார் 0.0643 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-*

*வடக்கு : வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் திரு. இரத்தினசபாபதியின் மனைவியான திருமதி இராசம்மா சொந்தம் கொண்டாடுகின்ற காணி ;*
*கிழக்கு : திரு. கணபதி ஆறுமுகம் சொந்தம் கொண்டாடுகின்ற காணி ;*
*தெற்கு : தேசிய மின்சார சபைக்கு சொந்தமான காணி ;*
*மேற்கு : வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமான காணி.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : பிரதேச செயலகம்,*
*வேலணை.*

*2- 847*